மலேசியத் தமிழ் ஆய்விதழ்
Malaysian Journal of Tamil
eISSN: 2990-9694

# திருக்குறள் காட்டும் ஆட்சிமுறை

## Politics in Thirukkural

இ.பன்னீர்செல்வம் / E. Panneer Selvam[1]
[1] முனைவர், ஸ்ரீ பாலபாரதி நர்சரி & பிரைமரி தொடக்கப்பள்ளி, கொத்தாம்பாடி, கல்பகனூர் அஞ்சல், ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்
Corresponding Email: semmoodhai@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

இவ்வாய்வின் முதன்மை நோக்கம் திருக்குறளில் காணக்கிடக்கும் ஆட்சிமுறையை ஆராய்வதாகும். இவ்வாய்வு பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. இவ்வாய்வின் வழி, திருக்குறளில் காணப்படும் ஆட்சிமுறையை அறிந்துகொள்ள வாய்ப்பாக அமைந்துள்ளது. இவ்வாய்வு திருக்குறளில் ஆட்சிமுறையை ஆய்வு செய்யும் முதல் கட்டுரை என்பதை ஆய்வாளர் உறுதி செய்கின்றார்.

**கருச்சொற்கள்:** திருக்குறள், ஆட்சிமுறை

**Abstract**

The major objective of the research is to explore politics in Thirukkural. This research is designed in a qualitative approach. The library work is used for this study. This study is useful in teaching the younger generation about the politics in Thirukkural. The research claims to be the first such attempt to do a study regarding the politics in Thirukkural.

**Keywords:** Humanity, Thirukkural

**முன்னுரை**

தமிழில் தோன்றிய நூல்களில் எல்லோராலும், எல்லாக் காலங்களிலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட தகுதியுடைய நூல் திருக்குறள் எனலாம். தனிமனிதன், சமுதாய மனிதன், அரசியல் மனிதன் என்ற பல்வேறு படிநிலைகளில், பல்வகைப் பொறுப்புக்களையும் மேற்கொண்டிருக்கும் மாந்தர்க்கு நெறிமுறைகளையும், ஒழுங்குகளையும் வரையறுத்து விளங்கியவர் திருவள்ளுவர்.

எல்லாப் பொருளும் இதன்பாலுள இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்

என்கிறது திருவள்ளுவ மாலை.

வள்ளுவர் தன்னை உலகினுக்கே தந்து
வான் புகழ் கொண்ட தமிழ்நாடு

என்று பாரதி பாடியுள்ளார். உலகில் மதங்கள் தோன்றிய என்று காலத்திலிருந்தே, ஒன்றொடொன்று போராடும் மதங்கள் எல்லாம் ஒருசேர ஏற்கும் பொதுமறை மாத்திரமல்லாது, ஒருமனதாகப் பாராட்டும் ஒவ்வொன்றும் தத்தமது உரிமை கொண்டாடும் ஒரே நூல் திருக்குறளே.

**ஆய்வு நெறி முறைகள்**

இவ்வாய்வுப் பண்புசார் அணுகுமுறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவ்வாய்வில் நூலாய்வு அணுகுமுறை கையாளப்பட்டுள்ளது. நூலாய்வில் ஆய்வுக்குத் தொடர்புடைய ஆய்வேடுகள், புத்தகங்கள், ஆய்வுக் கட்டுரைகள் ஆகியவை தேர்ந்தெடுக்கப்பட்டு விளக்கமுறை அணுகுமுறையில் தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**ஆட்சி**

அரசு என்னும் நிறுவனம் ஆட்சி என்னும் செயலியால் தான் இயங்குகிறது. ஆட்சி திறம்பட செயல்படாமல் போனால் அரச செயல் இழந்து விடும்.

"ஒரு சமூகத்தில் ஒருவனோ அல்லது ஒரு ஸ்தாபனமோ கட்டளையிட அக்கட்டளைக்கு அடங்கி அச்சமூகத்தைச் சார்ந்த மற்றவர்கள் நடந்து வந்தால் அந்த மனிதனை, அல்லது ஸ்தாபனத்தை அராசாங்கம் என்று சொல்வார்கள் அராசாங்கம் இல்லாத சமூகம் கிடையாது. சமூகமும் அரசாங்கமில்லாமல் நிலைக்க முடியாது.

[தமிழ்க் கலைக் களஞ்சியம் தொகுதி ஒன்று ப.153 ]

வள்ளுவர் பொருட்பாலில் அரசியல் என்ற இயலில் 25 அதிகாரங்களை வைத்துள்ளார். இவை தவிர அமைச்சியல் என்ற இயலில் 10 அதிகாரங்களையும், அரணியலில் 2 அதிகாரங்களையும், கூழியலில் ஒரு அதிகாரத்தையும், படையியலில் 2 அதிகாரங்களையும், நட்பியலில் 17 அதிகாரங்களையும், குடியியலில் 13 அதிகாரங்களையும்

நமக்கு அளித்துள்ளார். ஆக மொத்தம் 700 குறட்பாக்களில் பெருமளவில் அரசியற் கொள்கைகளை விவரித்துள்ளார்.

வள்ளுவர் எவ்வகையான ஆட்சி நல்லது என்று ஆராயவில்லை அரசின் அங்கங்கள் யாவை? அரசியலமைப்பு எப்படி இருக்க வேண்டும் ? ஆட்சி எவ்வாறு செயற்பட வேண்டும்? நல்லாட்சியின் கூறுகள் யாவை? இவற்றைப் பற்றி தம் சிந்தனையை அவர் வெளிப்படுத்தியுள்ளார்.

**அரசின் அங்கங்கள்**

"படைகுடிகூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு" [ கு - 381 ]

இவற்றில் குடி என்பது குடிகள், கூழ் (பொருள்) அரண் இரண்டும் ஆள் நிலத்தின் பகுதிகள், படை, அமைச்சு, நட்பு என்பன அரசியலின் பகுதிகள் என்பார் வள்ளுவர்.

அரசனைத்தாங்கி நடத்தும், அரசனுக்குப் படை, குடி, கூழ் அமைச்சு, நட்பு, அரண், கொடி, குடை, முரசு, புரவி, களிறு, தேர், மாலை, முடி, கொடை, அளி, செங்கோல், மானம், குடியோம்பல் ஆகியவை உடைமைகளாம்.

" படையும் கொடியும் குடையும் முரசும்
நடை நவில் புரவியும் களிறும் தேரும்
தாரும் முடியும் நேர்வன பிறவும்
தெரிவுகொள் செங்கோல் அரசர்க்குரிய
(தொல் – 1571)

என்று தொல்காப்பியர் கூறுகிறார்.

**அரசாள்வருக்கான தகுதிகளும் பண்புகளும்**

வள்ளுவர் இறைமாட்சி என்ற அதிகாரத்தில் அரசாள்பவருக்கு வேண்டிய தகுதிகளையும், பண்புகளையும் விவரிக்கிறார். இந்த தகுதிகளும், பண்புகளும் தற்போதுள்ள அமைச்சரவையில் உள்ள ஒவ்வொரு அமைச்சருக்கும் ஓரளவிற்காவது இருக்க வேண்டியவையே. தகுதிகளும், பண்புகளும் பின்வருமாறு

அஞ்சாமை ஈகை அறிவு வாக்கும். (குறள் – 382)
தூங்காமை கல்வி, துணிவு (கு-383)
காட்சிக்கு எளிமை, கடுஞ்சொல் கூறாமை (கு-384)
பொறை உடைமை (கு-389)
அருள் செங்கோல் முறை (கு-390)
பொச்சாவாமை (அதிகாரம் – 54)
கண்ணோட்டம் (அதிகாரம் – 58)
ஊக்கம் உடைமை (அதிகாரம் – 40)
மடியின்மை (அதிகாரம் – 41)
ஆள்வினையுடைமை (அதிகாரம் – 62)

இடுக்கன் அழியாமை (அதிகாரம் – 63)
அறிவு அற்றம் காக்கும் கருவி (கு - 421)

மேலே சொன்ன பண்புகளும் தகுதிகளும் இல்லாத சிலர் ஆட்சியைக் கைப்பற்றினால் குடிமக்கள் துன்புறுவர் என்பது வெளிப்படை. கொடுங்கோல் ஆட்சியில் வழிப்பறிக் கொள்ளை போன்று வரி வசூலிக்கப்படும். ( குறள் – 552 ). இயற்கை சக்தியினால் இழப்பு நேரும் நிலையில் கல்வி அறிவு இல்லாதவர் ஆட்சியில் அமர்ந்திருந்தால் விருமுன்காவாது மக்களைத்துன்பத்துக்கு ஆளாக்குவர் ( குறள் – 427, 429) இவற்றையெல்லாம் சிந்தித்தால் வள்ளுவர் சொல்லிய தகுதிகளும் பண்புகளும் அவசியம் என்பது நமக்கு விளங்கும்.

**தலைமைப் பண்புகள்**

தலைமைப் இயல்பாகவே நடுநிலைமையுடன் செயல்படுவார். உள்ளத்திலும், சொல்லிலும், செயலிலும், நடுவுநிலைமை கடைபிடிப்பார். தகாத செயல் செய்ய நாணுவார். உணவு, உடை மற்றவையாவும், எல்லோருக்கும் பொது சிறந்த மனிதரிடம் காணப்படுவது தகாதவற்றைச் செய்ய நாணம்.

இற்பிறந்தார் கண் அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு - ( கு - 951 )

கருமத்தால் நாணுதல் நாணுத் திருநுதல்
நல்லவர் நாணுப் பிற - ( கு - 1011 )

ஊண்உடை எச்சம் உயிர்க்கு எல்லாம் வேறுஅல்ல
நாண் உடைமை மாந்தர் சிறப்பு - ( கு - 1012 )

வாழ்க்கையில் வாழ்வும் வறுமையும் மாறி மாறி வரலாம். வறுமை வரும்போது உயர்வு வேண்டும். பொருள் சேரும்போதும் உயர்பதவிகள் வரும்போதும் பணிவு தேவை.

பெருக்கத்து வேண்டும் பணிதல் சிறிய
சுருக்கத்து வேண்டும் உயர்வு (கு - 943)

ஆட்சி பொறுப்பில் இருப்பவர்களுக்கு ஒழுக்கம் எப்போதும் மேன்மை தரும். யார், யார் தம் பணியை ஒழுக்கத்துடன் செய்கிறார்களோ அவர்களுக்குப் பதவி உயர்வு வருவது திண்ணம். ஒரு கால கட்டத்தில் நல்லபணி செய்பவருக்கு உரிய பாராட்டும் பதவியும் கிடைக்கவில்லை என்றாலும் பிரிதோர் காலத்தில் அவரது பணியின் சிறப்பைக் கண்டு அவருக்கு உரியவை

அளிக்கப்படும். மேலும், உயர்பதவி வகிப்பவரிடம் ஒழுங்கு இல்லை என்றால் அவர் குடிப்பிறப்புக் குறித்து ஐயம் தோன்றும்.

“ஒழுக்கத்தின் எய்துவார் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி” - ( கு - 137 )

### அரசியற் கோட்பாடுகள்

அரசின் பொருளதாரக் கொள்கையை வள்ளுவர் சுருக்கமாகத் தனது 385-வது குறளில் கூறுகிறார்.

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்ல தரசு ” - ( கு - 385 )

### வள்ளுவர் நமக்களிக்கும் கோட்பாடு

வருவாய்க்கான வழிகளை உண்டாக்குவதும், அவ்வழியிலே பொருள் சேர்ப்பதும், சேர்த்தவற்றைக் காப்பதும், காத்தனவற்றை திட்டமிட்டுப் பயன்படுத்துவதும் அரசின் கடமை என்று அரசு எவ்வாறெல்லாம் இயங்க வேண்டுமென்று வரிசையாக சொல்லிக் கொண்டே வருகிறார்.

### அரசு செயற்பாட்டு விதிகள்

அரசு எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது பற்றி வள்ளுவர் தெரிந்து, செயல்வகை, வலியறிதல், காலமறிதல், இடனறிதல் என்ற நான்கு அதிகாரங்களில் கூறுகிறார்.

” எண்ணித் துணிக கருமந் துணிந்தபின்
எண்ணுவ மென்ப திழுக்கு ” - ( கு - 467 )

ஒருசெயலை செய்யப் புகுமுன் சிந்திக்க வேண்டும். ஒரு செயலில் வரும் அழிவையும் அதன் பின் ஆவதையும், அதன் விளைவாக வரும் ஊதியத்தையும் தன்னுடன் சேர்ந்த பெரியோருடன் கலந்து சீர்தூக்கிச் செயலைச் செய்ய வேண்டும். மேலும் ஒரு காரியத்தை தொடங்குமுன் .இது சிறியது தானே என்று பலவற்றைத் தொடங்கினால் அவை முடிக்க முடியாமல் போகலாம் என்பதை

“பீலிபெய் சாகாடும் அச்சு இறும் அப் பண்டம்
சால மிகுத்துப் பெயின் ” (கு – 475)

என்று விளக்குகிறார்.

### நிறைவுரை

ஆட்சி செய்வோர் அல்லது ஒரு அரசு பெரியோரை துணையாகக் கொள்ள வேண்டும். குற்றம் செய்யாமல் ஆட்சி செலுத்துவதைக் குறிக்கோளாக் கொள்ள வேண்டும்.

செங்கோன்மையை கடைபிடிக்க வேண்டும். அதுபோலவே வலியறிந்து, காலமறிந்து, இடமறிந்து செயலைச் செய்யும்வகை. தவறு செய்பவர்களைத் தண்டிக்கும் முறை, நாட்டு நடப்புகளை விரைந்து அறியும் முறை, போன்றவற்றுடன் அரசனானவன் கல்வி, கேள்வி முதல் பல்வேறு தகுதிகள் பெற்றிருப்பின்

"முறை செய்து காப்பாற்றும் மன்னவன், மக்கட்கு
இறை என்று வைக்கப்படும்"

என்பது முறை செய்தலும் காத்தலுமே, மன்னனின் தலையாய கடமைகள் அதனால் அவன் இதனையே தனக்குத் துணையாகக் கொள்ள விரும்புகிறான் என்று செயல்பட்டாலே நாட்டு மக்களைக் விரும்புகிறான் என்று செயல்பட்டாலே நாட்டு மக்களைக் காப்பாற்றலாம் என வள்ளுவ பெருந்தகை எடுத்துரைக்கின்றார்.

**துணைநூற்பட்டியல்**

இலக்குவனார். சி, திருக்குறள், அபிராமி பதிப்பகம், 2002.
மாணிக்கவாசகன். ஞா, (உரையாசிரியர்), புறநானூறு மூலமும் உரையும், உமா பதிப்பகம், சென்னை
விளம்பிநாகனார் இயற்றிய நான்மணிக்கடிகை, உரையாசிரியர் தி.ச. பாலசுந்தரம் பிள்ளை, சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி, 1965.
திருவாசகம் விளக்கியவர் ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர், ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம், திரு பராய்த்துறை, திருச்சிராபள்ளி, 2011.
சங்க இலக்கிய நூல்கள், கழக வெளியீடு
தட்சிணாமூர்த்தி. அ., சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உணர்வுகள், பதிப்பு-2001.
புறநானூறு மூலமும் பழைய உரையும், உ.வே.சாமிநாதையர் (ப.ஆ.), சென்னை, 1971.
தேவநேயப் பாவாணர், ஞா. திருக்குறள் – தமிழ் மரபுரை, ஸ்ரீ இந்து பப்ளிகேஷன்ஸ், சென்னை